iraṅkalum iraṅkal nimittamum — "lamenting and its causes"; lady's bemoaning her lover's absence, a mood appropriate to the meri-time tracts (*uripporuḷ* in *neytal*)

iruttalum iruttal nimittamum — "patient waiting and its causes"; lady's bearing patiently seperation from her husband, a mood appropriate to forest-pasture tracts (*uripporuḷ* in *mullai*)

iṟaicci "suggestion", i.e. suggestive meaning conveyed by reference to natural phenomena, e.g. "the rain has not come though it is expected" would refer to the fact that the hero did not turn up, though he was expected

uvamai "simile", i.e. a comparison giving a more clear idea of the object described, e.g. jumps like a tiger

uri-p poruḷ "appropriate subject matter", i.e. the distinctive erotic mood in love, the idea, appropriate to each of the five tracts of land (*ain tiṇai*); psychosomatic behaviour-pattern of people (Zvelebil, 1974,37):

1. *puṇartal* (*kuṟiñci*)
2. *pirital* (*pālai*)
3. *iruttal* (*mullai*)
4. *ūṭal* (*marutam*)
5. *iraṅkal* (*neytal*)

uṭaṉ pōkku "going away with (some one)"; the going away of an unmarried young woman with her lover to his own place without the knowledge of her parents

uḷiñai "Balloon vine", a small climber, Cordiospermum halicacabum, Linn., a conventional name for *puṟa-t tiṇai* describing a defence of a fort when it is beseiged

uḷ-ḷ uṟai "inner meaning", or hidden meaning, i.e. symbolical meaning of the poems expressed by parallels between nature and natural phenomena and the spere of human life and activities (sometimes it is translated as implied simile; there is a one-to-one correspondence of natural and human phenomena: buffalo-hero, etc.); an implication by means of a metaphor or a simile, a technique of using the scene to describe the act or agent (Zvelebil, 1974,44)

ūṭalum ūṭal nimittamum "sulking and its causes", love quarrel between husband and wife arising from jealousy, appropriate to the agricultural tracts (*uripporuḷ* in *marutam*)

ain tiṇai "five regions", i.e. five tracts of land reflected in a conventional literary description of life, especially as concerns love between man and woman (*akam*, q.v,) as manifested in situations pertaining to these five tracts of land (i.e. *kuṟiñci, pālai, mullai, marutam, neytal*, q.v.); each is distinguished by *poruḷ* (q.v.) and *tuṟai* (q.v.); see also *tiṇai*

oru vaḻi-t taṇattal "one-way-departure", i.e, temporary absence of the lover from the place of his lady-love to avoid all gossip (*tuṟai* in *akam*)

kaṭai vaḷḷalkaḷ "last liberal people", i.e. liberal kings or chieftains, munificent patrons of the last Sangam, who gave liberally to those who praised them; there are seven of them: *Pāri, Āy, Eḻiṉi, Naḷḷi, Malaiyaṉ, Pēkaṉ, Ōri;* besides that there are supposed to have been *mutal vaḷḷalkaḷ* (early liberal people) of the First Sangam and *iṭai vaḷḷalkaḷ* (middle liberal people) of the Middle Sangam

karu-p poruḷ "substance subject-matter", characteristic regional features of the physical world of the five tiṇais as reflected most typically in flora and fauna; basic physical, material manifestations (Zvelebil, 1974,37); TL divides them into 14 items including:

1. *teyvam* (gods)	8. *pū* (flowers)
2. *talaivar* (heroes)	9. *maram* (trees)
3. *makkaḷ* (people)	10. *uṇā* (food)
4. *puḷ* (birds)	11. *paṟai* (drums)
5. *vilaṅku* (beasts)	12. *yāḻ* (stringed instruments)
6. *ūr* (settlements)	13. *paṇ* (melody type
7. *nīr* (waters)	14. *toḻil* (occupation)

Tol.Poruḷ. 18 has a smaller list of 8 items.

kāñci "River portia", Trewia nudiflora, Linn., a conventional name for a *puṟa-t tiṇai* theme describing the defence of a fortress, while the king (or his warriors) wears a garland of *kāñci* flowers

kai-k kiḷai "small branch", conventional name for unreciprocal sexual love, one-sided love

kaiyaṟu nilai "action-less state", i.e. elegy; theme discribing the utter helplessness of dependents at the death of a chief or his wife (*tuṟai* in *puṟam*)

kuṟiñci "square branched cone head, medium shrub", Strobilanthes kunthianus (TL); Phelophyllum kunthianum, Nees. (Cīnivācaṉ); a conventional name of the hilly tract, one of the five tracts of land (*ain tiṇai,* q.v.) where a clandestine union of lovers takes place

ciṟu poḻutu "small time", "narrow time", i.e. division of the small time cycle (the day) into six parts:

1. *vaikaṟai* (day break)
2. *viṭiyal* (early morning)
3. *naṇpakal* (noon)
4. *eṟpāṭu* (afternoon)
5. *mālai* (evening)
6. *yāmam* (midnight)

Parallel term: *perum poḻutu* (q.v.)

tiṇai "region" conventional classification of literary creation of the *akam* type according to the socio-geographical surroundings into five main tracts (*ain tiṇai.* q.v.) and two additional types (*kai-k kiḷai* and *perun tiṇai,* q.v.); similarly *puṟam* is divided into 7 *tiṇais* (see *puṟa-t tiṇai*) which *Tolkāppiyam* correlates with the *aka-t tiṇais* as follows:

Akam	*Puṟam*
kuṟiñci	*veṭci* (Tol.Poruḷ.56)
mullai	*vañci* (Tol.Poruḷ.61)
marutam	*uḻiñai* (Tol.Poruḷ.64)
neytal	*tumpai* (Tol.Poruḷ.69)
pālai	*vākai* (Tol. Poruḷ.73)
peruntiṇai	*kāñci* (Tol.Poruḷ.77)
kaikkiḷai	*vāṭāṇ* (Tol.Poruḷ.80)

tiṇai mayakkam "blending or mixing of *tiṇais*", supposed to be a harmonious blending of the features of one *tiṇai* with those of another

tumpai "White dead nettle", Leucas aspera (Spr.), or Bitter toombay, a common weed, a conventional name of a *puṟa-t tiṇai* describing a heroic fight of the King or warrior while wearing a garland of these flowers

tumṟai "branch, section", specific theme in *akam* and *puṟam* (q.v.) which refers to the concrete situation or event described in a poem

neytal "blue water lily" Nymphaea violacea, Lehm. (Cīnivācaṉ);TL: white Indian water lily,Nymhaea lotus alba, a conventional name of the maritime tract, one of the five tracts of land (*ain tiṇai,* q.v.), describing mainly the sorrow of lovers arising from separation

nocci "an evergreen tree", Vitex negundo Linn., (Cīnivācaṉ), or Vitex trifolia, a conventional name for one of the major themes describing the defence of a fort by warriors wearing *nocci* garlands (a *tiṇai* in *puṟam*)

paricil viṭai "discharging gifts", a theme of a king's bestowing gifts upon his panegyrists and permitting them to leave in a happy mood (a *tuṟai* in *puṟam*)

pāṭ- āṉ "a sung ov extolled man", (r.p.b. *pāṭu*+ *āṉ*); a conventional name for a puṟa-t tiṇai, a theme of praising a hero's fame, power and munificence

pālai Deyer's oleander (Samy 1972), Easter tree (Rāj 1982), Wrightia tinctoria, R. Br. (Cīnivācaṉ); a conventional name of the arid, desert tract, one of the five tracts of land (*ain tiṇai*, q.v.) where separation of lovers is the main theme

piritalum pirital nimittamum "separation and its causes", separation of lovers depicted by means appropriate to the desert tract (*uripporuḷ* in *pālai*)

puṇartalum puṇartali nimittamum "union (cohabitation) and its causes", union of overs appropriate for the hilly tract, usually a clandestine love union (*uripporuḷ* in *kuṟiñci*)

puṟa-t tiṇai "divisions of *puṟam*" (q.v.), themes describing conduct as regards war, state-affairs etc., Tol. Poruḷ. gives seven *tiṇais*, viz., *veṭci, vañci, kāñci, uḻiñai, tumpai, vākai, pāṭāṇ* (q.v.). In later works, there are more subdivisions added, e.g. *nocci, potuviyal* (q.v.), etc.

puram "exterior", "public", a division of literature dealing with public life, mainly the King, administration, war, etc.

perun tiṇai "large region", a conventional term for improper love which violates customary rules, the woman is older than the man, is of a different caste or does not consent.

perum poḻutu "large time',, "broad time", i.e. a division of the great cycle of time (the year) into six parts (seasons), two months each:

1. *kārkālam,* "dark season", i.e. rainy season
   āvaṇi 15 Aug. - 15 Sept.
   puraṭṭāci 15 Sept. - 15 Oct.
2. *kūtir kālam,* "chill wind season", i.e. cool season
   aippaci 15 Oct. - 15 Nov.
   kārttikai 15 Nov. - 15 Dec.
3. *muṉpaṉi-k kāḷam,* "early dew season", i.e. a season when the dew comes at the late evening hours (i.e. the beginning of night)
   mārkaḻi 15 Dec. - 15 Jan.
   tai 15 Jan.-15 Feb.
4. *piṉpaṉi-k kālam,* "late dew season", a season when the dew comes at the early morning hours (i.e. the end of night)
   māci 15 Feb. - 15 March
   paṅkuṉi 15 March - 15 Apr.
5. *iḷa vēṉir kālam,* " young or tender hot season", (i.e. early summer)
   cittirai 15 Apr. - 15 May
   vaikāci 15 May - 15 June
6. *mutu vēṉir kālam,* "old or ripe hot season", (i.e. high summer)
   āṉi 15 June - 16 July
   āṭi 15 July - 15 Aug.

potu-v iyal "general nature' a conventional name for a theme telling some generally accepted principles or truths (a *tiṇai* in *puṟam*)

poruṇ moḻi-k kāñci "transiency (through) meaningful words", a theme describing the priniciples of conduct that ensure happiness in this life and the life to come (a *tuṟai* in *puṟam*)

poruḷ "subject, subject-matter", affairs of life as reflected in the poetic conventions of the literary creation of Sangam; three subject matters: *mutaṟpoṭuḷ, karupporuḷ uripporuḷ* (q.v.)

makaṇ maṟuttal "refusing the daughter", a theme describing the refusal of a chieftain to give his daughter in marriage to a hostile warrior when demanded (a *tuṟai* in *puṟam*)

marutam Terminalia arjuna, W.A. (Cinivācaṉ), or "Queen's flower; pride of India*", Lagerstroemia flos-reginae, Retr., a conventional name of the agricultural tract, one of the five tracts of the land (*ain tiṇai*, q.v.), for which sulking is supposed to be characteristic

mutaṟporuḷ "primary subject - matter", descriptions referring to place and time, which are specific for every *tiṇai*; as for time, *ciṟu poḻutu* (q.v.) and *perun poḻutu* (q.v.) are distinguished; time and space coordinates (Zvelebil, 1974, 37); these are allotted for the regions in the following way:

1. *kuṟiñci* - *kūtir, yāmam* (Tol.Poruḷ.6
   muṉpaṉi (Tol. Poruḷ.7)
2. *pālai* -*vēṉil, naṇpakal* (Tol.Poruḷ.9)

3. *marutam* - *vaikarai, vitiyal* (Tol.Poruḷ 8).

4. *mullai* - *kār, mālai* (Tol. Poruḷ.6)

5. *neytal* - *erpāṭu* (Tol. Poruḷ.8)

Note that not all the times are used in *akam*.

mutu moḻi-k kāñci "transiency (through) mature words", a theme of a wise man giving instruction on *aram*(*dharma*), *poruḷ* (*artha*) and *iṉpam* (*kāma*) to the people at large (a *turai* in *puram*)

mullai, "jasmine", Jasminum auriculatum, Vahl., a conventional name of the forest-pasture tract; one of the five tracts of land (*ain tiṇai,* q.v.), for which the most typical feature is patient waiting of the lovers

mūtiṉ mullai, "jasmine of elderliness", a theme describing the spirit of valour manifested among women of warrior tribles (a *turai* in *puram*)

vañci, "Indian willow", Salix tetrasperma, Roxb., or a creeping plant, Cocculus cordifolius; a conventional name for a *pura-t tiṇai* (q.v.), describing the advance of the king against his enemies with a view to annex their territories; on that occasion he could wear the *vañci* flowers on his head

varaivu kaṭātal, "marriage request", a theme of the female companion of the heroine urging the hero to marry as early as possible (a *turai* in *akam*)

vākai "Siris" or fragrant sirissa, Albizzia lebbeck, Benth; a conventional name for a *pura-t tiṇai,* a theme describing a conqueror wearing a chaplet of sirissa flowers and celebiating victoiy over his royal enemies

vāyil vēṇṭal, "repuesting entrance", a mediator requests the heroine to give permisson to the hero to see the heroine(a *tuṟai* in *akam);* it is linked with *vāyiṉ maṟuttal* (q.v.)

vāyiṉ maṟuttal, "refusal of entrance", the confidante of the heroine refuses the entrance or interview to the hero because of his behaviour (a *tuṟai* in *akam*); it is linked with *vāyil vēṇṭal* (q.v.)

veṭci, "Scarlet ixora", Ixora coccinea, Linn., middle shrub; a conventional name for a *puṟa-t tiṇai,* a theme describing a king's follower wearing *veṭci,* flowers and capturing the cows of enemy as an act of war

CLASSIFIED LISTS

1. Gods and mythological figures

amarar
intirar
kaṭavuḷ
piruṅkalātaṉ

2. People and professions

akattōr
antaṇar
aṇṇal
irappōr
iravalar
umaṇar
uḻavar
kāppōr
kāṉattōr
kiḻavaṉ
kūttar
koṅkaṉ
kollaṉ
cāṉṟōr
tōṉṟal
nāṭaṉ
tuṟaivaṉ
paṭṭi
pāṭunar
pāṇar
pulavar
purappōr
puravalar
pūḻiyar
perumāṉ
pētai
pōṟṟār
pōṟṟunar
mākkaḷ
māṟṟōr
vaṇikaṉ
valaiñar
vāḻnar
vilaiñar
vēṭṭam
vēṭṭu
vēntaṉ

3. Kinship terms

aṉṉai
entai
okkal
kiḷai
kēṇmai
kēḷir
ñāy
tātai
tāy
nuntai
nuvvai
makaḷ
makaṉ
maṉaivi
muṟai

4. Personal names

aviṉi
ātaṉ
kaṭu māṉ (a nickname? cf. Puṟa. 162,7)
kumaṇaṉ
ceḻiyaṉ

5. Geographical names

aḻḻūr
īḻam
kaṅkai
kāviri
kāḻakam
pūḻi
mutiram

6. Plants

akil
amai
āmpal
āram
ālam
ēṉal
ōmai
kaṭampu
karumpu
kaṟi
kāñci
kuṟiñci
kaitai
cāntu
cāntam
tāmarai
tāḻai
tiṉai
tuḻāy
narantam
nīlam
neytal
neruñci
nel
pakaṉṟai
paṉai
pātiri
puṉṉai
pūvai
mā

7. Animals

aravu
alavaṉ
āṉ
iṟā
uvaṇam
eli
orruttal
kalai

kaḷiṟu
kākkai
kārāṉ
kāḷai
kiḷi
kuyil
kurii
kuruku
kokku
kēḻal
kōṭṭu miṉ
ciṉai
cēval
pākaṭu
pāṉṟi
pāmpu
puravi
puli
peṭai
pēṭai
maññai
manti
mayil
mā
māṉ
miṉ
yāṉai
vaṇṭu
veḷḷai

SELECT COMMENTARIES

Kuruntokai, U. Vē. Cāminātaiyar

Puranāṉūru, U. Vē. Cāminātaiyar

குறுந்தொகை

தலைவிகூற்று

(வரையாது ஒழுகும் தலைவன் வேலிப்புறத்தே நின்றதை யறிந்த தோழி அவன் வரைந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணமுடை யளாகி அவன் செவியிற் படும்படி அவனது நட்பைப் பழித்துக்கூறியபோது, தலைவி அந்நட்பு மிகச் சிறப்புடையதென்று உணர்த்தியது.)

3. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

எ-து. தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்துகொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

தேவகுலத்தார்.

(ப-ரை) சாரல் - மலைப்பக்கத்திலுள்ள, கரு கோல் குறிஞ்சி பூ கொண்டு - கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மலர்களைக் கொண்டு, பெரு தேன் இழைக்கும்- பெரிய தேனை வண்டுகள் செய் தற்கு இடமாகிய, நாடனொடு நட்பு - நாட்டையுடைய தலைவனோடு யான் செய்த நட்பானது, நிலத்தினும் பெரிது - பூமியைக் காட்டிலும் உயர்ந்தது; வானினும் உயர்ந்தன்று - ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; நீரினும் அருமை அளவின்று - கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழமுடையது.

(முடிபு) நாடனொடு செய்த நட்பு பெரிது; உயர்ந்தது; அளவினது என்க.

(கருத்து) தலைவனொடு செய்த நட்பு மிகச் சிறந்தது.

தலைவன் கூற்று

(தெய்வத்தாலாகிய கூட்டத்தின் பின்பு தலைவி, தலைவன்பிரி வானோவென ஐயுற்றவிடத்து அதனைக் குறிப்பாலறிந்த தலைவன், 'ஒரு தொடர்பு மில்லாத நாம் ஊழின் வன்மையால் ஒன்று பட்டோ மாதலின் இனி நம்மிடையே பிரிவு உண்டாகாது' என்று உணர்த்தியது.)

40. யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

எ-து. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்னர், பிரிவரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்புவேறுபாடு கண்டு தலைமகன் கூறியது.

செம்புலப் பெயனீரார்

(ப-ரை.) யாயும் - என்னுடைய தாயும், ஞாயும் - நின் தாயும், யார் ஆகியர் - ஒருவருக்கொருவர் எத்தகைய உறவின் முறையினராவர்? எந்தையும் - என் தந்தையும், நுந்தையும், - நின் தந்தையும், எ முறை கேளிர் - எந்த முறையில் உறவினர்? யானும் நீயும்-இப்பொழுது பிரிவின்றியிருக்கும் யானும் நீயும், எ வழி அறிதும் - ஒருவரையொருவர், எவ்வாறு முன்பு அறிந்தோம்? இம்மூன்றும் இல்லையாகவும், செ புலம் பெயல் நீர்போல - செம்மண் நிலத்தின் கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மை யை யடைதல்போல, அன்பு உடை நெஞ்சம் - அன்புடைய நம் நெஞ்சம், தாம் கலந்தன - தாமாகவே ஒன்றுபட்டன.

(முடிபு) யாயும் ஞாயும் யாராகியர்? எந்தையும் நுந்தையும் எம் முறைக்கேளிர்? யானும் நீயும் எவ்வழி அறிதும்? நெஞ்சம் கலந்தன.

(கருத்து) இனிப் பிரிவரிது.

தோழி கூற்று

(தலைவனுக்குத் தூதாக வந்த பாணன், "தலைவன் மிக்க அன்புடையன்" என்று பாராட்டியபொழுது தோழி, "இவன் சொல்லத் தான் அவரதன்பு புலப்படுகின்றது. மற்று அவர் செயலால் அறிந் திலம்" என்று கூறி வாயில் மறுத்தது.)

85. யாரினு மினியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

எ-து. வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயின் மறுத்தது.

வடமன் (பி-ம். வடம வண்ணக்கன்) **தாமோதரன்**

(ப-ரை.) உள் ஊர் குரீஇ - ஊரினுள் இருக்கும் குருவியின், துள்ளு நடை சேவல் - துள்ளிய் நடையையுடைய ஆண்பறவை யானது, சூல்முதிர் பேடைக்கு - கருப்பம் முதிர்ந்த பெண் குருவிக்கு, ஈன் இல் - பொறை யுயிர்த்தற்குரிய இடத்தை, இழைஇயர் அமைக்கும்பொருட்டு, தேம் பொதிகொண்ட - தேன் பொதிதலைக் கொண்ட, தீ கழை கரும்பின் - இனிய கோலையுடைய கரும்பினது, நாறா வெண் பூ - மணம் வீசாத வெள்ளிய பூவை, கொழுதும் - கோதி யெடுக்கும், யாணர் ஊரன் - புதுவருவாயையுடைய ஊருக்குத் தலைவன், பாணன் வாயே - பாணனது சொல்லின் அளவில், யாரினும் இனியன் -; எல்லாரினும் இனிமையையுடையான்; பெரு அன்பினன் - தலைவியின்பாற் பெரிய அன்பினை உடை யான்; உண்மையில் அங்ஙனம் இலன்.

(முடிபு) ஊரன், பாணன் வாயே இனியன்; பேரன்பினன்.

(கருத்து) பாணன் தலைவனைப் புகழினும் தலைவன் அன்பிலன்.

தலைவன் கூற்று

(தலைவன் குறியிடத்தில் வந்ததைக் குறிப்பால் அறிவித்த காலத்தில் தலைவி அவன் வருதற்கு முன்னரே குறியல்லாததைக் குறியென்றெண்ணிச் சென்று வறிதே மீண்டவளாதலின் வாரா தொழிய, வருத்தமுற்ற தலைவன், "தலைவி நன்மையையுடையா ளென்பதை யறிந்தது போலப் பெறுதற்கரியா ளென்பதையும் இதுகாறும் அறிந்திலையே! "என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.)

120. இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே.

எ-து. (1) அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற் குச் சொல்லியது.

(2) இஃது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிந்த வழிக் கலங்கியதுமாம்.

பரணர்

(ப-ரை.) நெஞ்சே -, இல்லோன் இன்பம் காமுற்றாஅங்கு - பொருளில்லாத வறிஞன் இன்பத்தை விரும்பினாற்போல, அரிது வேட்டனை - பெறுதற்கரியதை நீ விரும்பினை; நீ, காதலி - நம் தலைவி, நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு - நமக்கு நன்மை தருபவளா தலை அறிந்தது போல, அரியள் ஆகுதல் அறியாதோய் - நாம் நினைக்கும் பொழுதெல்லாம் நமக்கு எளியளாய் வருவதன்றிப் பெற்றகரியளாதலையும் அறியாயாயினை.

(முடிபு) நெஞ்சே, அரிது வேட்டனை; அறியாதோய்.

(கருத்து) தலைவி பெறுதற்கரியள்.

தலைவி கூற்று

(தலைவன் பிரிந்திருந்த காலத்தில் மாலைப்பொழுது கண்டு தலைவி வருந்திக் கூறியது.)

122. பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலுங் கூம்பின வினியே
வந்தன்று வாழியோ மாலை
ஒருதா னன்றே கங்குலு முடைத்தே.

எ-து. தலைமகள் பொழுதுகண்டு அழிந்தது.

ஓரம்போகியார்.

(ப-ரை.) பசு கால் கொக்கின் - பசிய கால்களையுடைய கொக்கினது, புல்புறத்து அன்ன - புல்லிய புறத்தைப் போன்ற, குண்டு நீர் ஆம்பலும் கூம்பின - ஆழமாகிய நீர்நிலையில் வளர்ந்த ஆம்பலின் மலர்களும் குவிந்தன; இனி - இப்பொழுது, மாலை வந்தன்று - மாலைக் காலம் வந்தது; வாழி - அது வாழ்வதாக! ஒரு தான் அன்று - இங்ஙனம் வந்தது இம்மாலையாகிய தான் ஒன்று மட்டும் அன்று; கங்குலும் உடைத்து - தன் பின்வரும் யாமத்தையும் உடையது; இனி என் செய்வேன்!

(முடிபு) ஆம்பலும் கூம்பின! இனி மாலை வந்தன்று; ஒரு தான் அன்று; கங்குலும் உடைத்து.

(கருத்து) இராக்காலம் வந்து விட்டது. இனி யான் மிக்க துன்பத்தை அடைவேன்.

தோழி கூற்று

(தலைவியைப் பிரிந்து தனியே செல்ல விரும்பிய தலைவன், "பாலை நிலம் இவள் வருதற்கு உரியதன்று; இன்னாமையை உடையது" என்று கூற, "தலைவரைப் பிரிந்தாருக்கு வீடுமட்டும் இனிமையை யுடையதோ?" என்று வினவு முகத்தால் தலைவியையும் உடன்கொண்டு செல்லும்படி தோழி அறிவித்தது.)

124. உமணர் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னா வென்றி ராயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.

எ-து. புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போக லுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

பாலைபாடிய பெருங்கவிக்கோ.

(ப-ரை.) பெரும - தலைவ, உமணர் - உப்பு வணிகர், சேர்ந்து கழிந்த மருங்கின் - பலர் கூடிக் கடந்து சென்ற பக்கத்தையும், அகன்றலை - விரிந்த இடத்தையும் பெற்ற, ஊர் பாழ்த்தன்ன - குடியிருந்த ஊர் பாழாகப் போனதைப் போன்ற தோற்றத்தை யுடைய, ஓமை பெரு காடு - ஓமை மரங்கள் வளர்ந்த பெரிய பாலை நிலங்கள், இன்னா - இன்னாமையையுடையன, என்றிராயின் - என்று கூறித் தனியே செல்லக் கருதினீராயின், தமியோர்க்கு - தலைவரைப் பிரிந்த தனிமையையுடைய மகளிருக்கு, மனை - வீடுகள், இனியவோ - இனிமை தருவனவோ? அல்ல.

(முடிபு) பெரும, காடு இன்னா என்றிராயின் தமியோர்க்கு மனை இனியவோ?

(கருத்து) தலைவியையும் உடன்கொண்டு செல்லுதல் வேண்டும்.

தலைவி கூற்று

(தலைவன் மீண்டுவருவேனெனக் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்த பின்பும் அவன் வராமையால் வருந்திய தலைவி தோழியை நோக்கி, "கார்ப்பருவம் வந்துவிட்டது; முல்லைக் கொடிகள் அரும்பின; தலைவர் இன்னும் வந்திலர்" என்று கூறியது.

126. இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

எ-து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஒக்கூர் மாசாத்தி

(ப-ரை.) தோழி -, இளமை பாரார் - இளமையது அருமையைப் பாராராகி, வளம் நசைஇ சென்றோர் - பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர், இவணும் வாரார் - இவ்விடத்தும் இன்னும் மீண்டு வந்திலர்; எவணரோ - எவ்விடத்தில் உள்ளாரோ? என-என்று யாம் எண்ணியிருப்ப, நறு தண் கார்-நறிய தண்ணிய கார் காலம், பெயல் புறந்தந்த - மழையாற் பாதுகாக்கப் பட்ட, பூ கொடி முல்லை-பூவையுடைய முல்லைக்கொடியினது, தொகு முகை இலங்கு எயிறு ஆக - தொக்க முகைகளை விளங்கு கின்ற தன்பற்களாகக் கொண்டு, நகும்-நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

(முடிபு) தோழி, சென்றார் எவணரோ என, கார் நகும்.

(கருத்து) கார்காலம் வந்துவிட்டது; தலைவர் வந்திலர்.

தலைவன் கூற்று

(தலைவியைப் பால் வயத்தனாகிக் கண்டு அளவளாவி நீங்கும் தலைவன், "என் உள்ளம் தலைவியினிடத்தே உள்ளது; இதனை அவள் அறிந்தனளோ, இலளோ!" எனக் கூறியது.)

142. சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ விலளோ பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

எ-து. (1) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது.

(2) தோழிக்குத் தலைமகன், தன்குறை கூறியதூஉமாம்.

கபிலர்

(ப-ரை.) பால் நாள் பள்ளி யானையின் உயிர்த்து - நடுயாமத்துப் படுத்துத் துயிலுதலையுடைய யானையைப் போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, என் உள்ளம்-எனது நெஞ்சம், பின்னும் - நான் தலைவியைப் பிரிந்து வந்த பின்னரும், தன் உழையது - அவளிடத்திலே இருக்கின்றது; சுனைபூ குற்று - சுனையில் மலர்ந்த மலர்களைப் பறித்து, தொடலை தைஇ - மாலையைக் கட்டி, புனம் கிளி கடியும்- தினைப் புனத்திற் கதிரை உண்ணும் பொருட்டு வீழும் கிளிகளை ஓட்டுகின்ற, பூ கண்பேதை - பூவைப் போன்ற கண்ணையுடைய பேதையாகிய அத் தலைவி, அறிந்தனளோ இலளோ - இதனை அறிந்தாளோ இல்லையோ!

(முடிபு) என் உள்ளம் தன்னுழையது; பேதை அறிந்தனளோ! இலளோ!

(கருத்து) என் உள்ளம் தலைவியின்பால் உள்ளது.

தலைவி கூற்று

(தலைவனது பிரிவினால் வருந்துந் தலைவி காமமிகுதியாற் கடலை நோக்கி, "நீ நள்ளிரவிலும் ஒலிக்கின்றனையே; யாரால் வருத்தமுற்றாய்?" என இரங்கிக் கூறியது.)

163. யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

எ-து. தன்னுட் கையாறெய்திடு கிளவி. (கையாறு-செயலறுதல்.)

அம்மூவன்.

(ப-ரை.) கடலே-, பூழியர் - பூழி நாட்டாரது, சிறு தலை-சிறிய தலையையுடைய, வெள்ளை தோடு பரந்தன்ன - வெள்ளாட்டின் தொகுதி பரவினாற்போன்ற, மீன் ஆர் குருகின் - மீனை உண்ணும் கொக்குகளையுடைய, கானல் பெரு துறை - சோலை சூழ்ந்த பெரிய துறையினிடத்து, வெள் வீ தாழை - வெள்ளிய பூவையுடைய தாழையை, திரை அலை - அலைகள் அலைக்கின்ற, நள்ளென் கங்குலும்-நடு இரவிலும், நின் குரல் கேட்கும் - நினது ஆரவாரம் செவிப்படும்; யார் அணங்கு உற்றனை - நீ யாரால் வருத்த மடைந்தாய்?

(முடிபு) கடலே, கங்குலும் நின் குரல் கேட்கும்; யா அணங்குற்றனை?

(கருத்து) கடலே, நீ யார் பிரிவுபற்றி வருந்துகின்றாய்?

தலைவி கூற்று

(பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்குத் தூதாக வந்த தோழியை நோக்கி, "தலைவர் இப்பொழுது எனக்கு இன்னாமையைத் தரும் ஒழுக்கத்தினராதலின் என் நெஞ்சு வருந்தும் அவரை ஏற்றுக்கொள்ளேன்" என்று தலைவி கூறியது.)

202. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
இன்னா செய்த னோமென் னெஞ்சே.

என-து. வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது

அள்ளூர் நன்முல்லை.

(ப-ரை.) தோழி, என் நெஞ்சு நோம் - என் நெஞ்சு வருந்தும்; என் நெஞ்சு நோம்-; புன்புலத்து - முல்லை நிலத்தின்கண், அமன்ற நெருங்கி முளைத்த, சிறிய இலை நெருஞ்சி - சிறிய இலைகளையுடைய நெருஞ்சியினது, கட்கு இன் புதுமலர் - முன்னர்த்தோன்றிக்

கண்ணுக்கு இனிய புதியமலர், முள் பயந்தாஅங்கு - பின்னர் இன்னாமையைத் தரும் முள்ளைத் தந்தாற்போல, இனிய செய்த நம் காதலர் - முன்பு நமக்கு இனியவற்றைச் செய்தொழுகிய நம் தலைவர், இன்னா செய்தல் - இப்பொழுது இன்னாதனவற்றைச் செய்தொழுகுதலால், என் நெஞ்சு நோம்-.

(முடிபு) என் நெஞ்சு நோம்; என் நெஞ்சு நோம்; நம் காதலர் இன்னா செய்தலால் என் நெஞ்சு நோம்.

(கருத்து) தலைவர் இன்னாராகி ஒழுகுதலால் என் நெஞ்சம் வருந்தும்,

செவிலித்தாய் கூற்று

(தலைவனுடன் தலைவி சென்றபின் செவிலித்தாய் அவளது இளமைத் தன்மையையும் பாலையின் வெம்மையையும் நினைந்து வருந்திக் கூறியது).

396. பாலு முண்ணாள் பந்துடன் மேவாள்
விளையா டாயமொ டயர்வோ ளினியே
எளிதென வுணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குர லோர்க்கும்
கழைதிரங் காரிடை யவனொடு செலவே.

எ-து. மகட்போக்கிய தாய் உரைத்தது.

கயமன்.

(ப-ரை.) பாலும் உண்ணாள் - பாலையும் உண்ணாளாகி, பந்துடன் மேவாள் - பந்தையும் விரும்பாளாகி, விளையாடு ஆயமொடு அயர்வோள்-முன்னர்த் தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிய தலைவி, இனி - இப்பொழுது, முளி சினை ஓமை குத்திய-உலர்ந்த கிளையையுடைய ஓமை மரத்தினைக்

குத்திய, உயர் கோடு ஒருத்தல்-உயர்ந்த கொம்பையுடைய ஆண் யானை, வேனில் குன்றத்து வெ அரை கவாஅன் - வேனிலின் தன்மையையுடைய மலையினிடத்துள்ள வெம்மையகிராய அடிவாரத்தில், மழை முழங்கு கடு குரல் ஓர்க்கும் - மேகம் முழங்கு கின்ற கடிய முழக்கத்தைக் கூர்ந்து கேட்கும், கழை திரங்கு அரு இடை-மூங்கில்கள் உலர்ந்த செல்லுதற்கரிய இடத்திலே, அவனொடு செலவு - அத்தலைவனோடு செல்லுதல், எளிது என உணர்ந்தனள் கொல்லோ - எளிமையையுடையதென்று அறிந்தாளோ?

(முடிபு) உண்ணாள், மேவாள், அயர்வோள், இனி அவனொடு செலவு எளிதென உணர்ந்தனள் கொல்லோ?

(கருத்து) தலைவி தலைவனொடு செல்லுதல் எளிதென நினைத்தனளோ?

28. சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
5 பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறின ரின்னும்
அதன்றிற மத்தையா னுரைக்க வந்தது
வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்
10 கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கு மகநாட் டையே
15 அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைந்நிற் போற்றா மையே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி வாழ்த்து.

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக் காஞ்சியுமாம்.

அவனை (சோழன் நலங்கிள்ளி) அவர் (உறையூர் முதுகண்ணன் சாத்தனார்) பாடியது.

(இ-ள்.) மக்கட்பிறப்பிற் சிறப்பில்லாத குருடும், வடிவில்லாத தசைத்திரளும், கூனும், குறளும், ஊமும் செவிடும் மாவும், மருளும் உளப்பட உலகத்து உயிர்வாழ்வார்க்கு எட்டு வகைப்பட்ட பெரிய எச்சமென்று சொல்லப்பட்ட இவை

யெல்லாம் பேதைத் தன்மையையுடைய பிறப்பாவதல்லது இவற்றாற் பயனில்லை யென முற்காலத்தும் அறிந்தோர் சொன்னார்' இன்னமும் அவ்வூதியத்தின் பாகுபாட்டை யான் சொல்ல வந்தது வட்டமாகிய வரியை யுடைத்தாகிய செம் பொறியையுடைய காட்டுக்கோழிச்சேவல் தினைப்புனம் காப்போரைத் துயிலுணர்த்து வதாகக் கூவும் காட்டின்கண் உள்ளோர், நின்னுடைய பகைவர்; நீதான் வேலிப்புறத்து நின்று வேண்டிய மாக்கட்கு அறத்தைக் கருதி, அகத்துள்ளோர் தாம் பிடுங்கியெறியும் கரும்பாகிய போகடப் பட்ட கழை வாவியகத்துத் தாமரையினது பொலிந்த பூச்சிதறவீழ்ந்த தாக, அது கூத்தர் ஆடுகளத்தை யொக்கும் உள்ளாகிய நாட்டை உடையை; ஆதலான், அறனும் பொருளும் இன்பமும் என்னப்பட்ட மூன்றும் செய்வதற்குதவும் பெரும! நினது செல்வம்;உதவாதொழிதல் நின்னைப் பாதுகாவாமை - எ-று.

பிண்ட மென்பது, மணைபோலப் பிறக்குமது. மாவென்பது, விலங்கு வடிவாகப் பிறக்குமது. மருளென்பது, அறிவின்றியே மயங்கி யிருக்குமது.

ஊதியமென்பது, அறம் பொரு ளின் பங்களை; அன்றி அறமென் பாரும் உளர்.

நிற்போற்றாமை யென்ற கருத்து, சிதடு முதல் அறிவின்மை (வரை) பிறப்பொடு கூடாதவாறுபோல நின்செல்வமும் அற முதலியன செய்தற் கேற்றிருப்பச் செய்யாமையாகிய அறிவின்மை, மக்கள் யாக்கையிற் பிறந்தும் பயனில் பிறப்பாகப் பண்ணுதலால் நினக்கு வரும் பொல்லாங்கைப் போற்றாமை யென்பதாம்.

கானத்தோர் நின் பகைவ ரென்ற வதனாற் பகையின்மை தோற்றி நின்றது.

மாவும் மருளும் உளப்படச் சிதடு முதலாகப் பிறப்பொடு கூட்டப்படாத பெரிய எச்ச மெனப்பட்ட எட்டுமெனக் கூட்டியுரைப் பினும் அமையும்.

இஃது அறஞ்செய்யாதானை அறஞ்செய்கவெனக் கூறியவாறு.

இதன் திற மென்பதற்கு அப் பேதைமை யென்றாக்கி, அஃது உண்டானால் வரும் பொல்லாங்கும், அது போனால் வரும் நன்மையு மென்றுரைப்பாரும் உளர்.

111. அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத், திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

திணையும் துறையும் அவை (=நொச்சி, மகண் மறுத்தல்.)

அவனை (வேள்பாரி) அவர் (கபிலர்) பாடியது.

(இ-ள்.) இரங்கத்தக்கது, பெரிய கரிய குன்றம்; அது வேலான் வெல்லுதல் வேந்தர்க்கோ அரிது; நீலத்தினது இணைந்த மலரை யொக்கும் மையுண்ட கண்ணையுடைய கிணையையுடைய விறலிக்கு எளிது, பாடினளாய் வரின்-எ-று.

அளிதோ வென்றது ஈண்டு வியப்பின்கன் வந்தது.

பாடினளாய் வரினென்ற கருத்து: அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்றுகோடல் அரிதென்பதாம்.

134. இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே.

திணை - அது (=பாடாண்); துறை - இயன்மொழி

அவனை (ஆய்) அவர் (ஏணிச்சேரி முடமோசியார்) பாடியது

(இ-ள்.) இப்பிறப்பின்கட் செய்ததொன்று மறுபிறப்பிற்கு உதவு மென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறங் கொள்ளும் வணிகன் ஆய் அல்லன்; அமைந்தோர் பிறரும் போயவழி யென்று உலகத்தார் கருத அந்த நற்செய்கையிலே பட்டது, அவனது கைவண்மை-எ-று.

அன்றி, ஆய் அறவிலை வணிகன் அல்லன்; பிறரும் சான்றோர் சென்ற நெறியெனக் கருதி அச் செய்கையிலே பட்டதன்று, அவன் கைவண்மை யென்றுரைப்பாரும் உளர். இதற்குப் பட்டன்றென்பது

மறைப்பொருள் படாமையின், பட்டதன்றென்பது பட்டன்றென விகாரமாகக் கொள்க.

162. இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
5 கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானை யெம்பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

திணை - அது (=பாடாண்); துறை - பரிசில் விடை.

அவர் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச் சென்ற அவர் (பெருஞ்சித்திரனார்) சொல்லியது.

(இ-ள்.)இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயுமல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையுமல்லர்; இனி இரப்போருண்டாதலையும் காண்பாயாக; இனி இரப்போர்க்கு இடுவோருண்டாதலையும் காண்பாயாக; நின்னுடைய ஊரின்கட் காவலையுடைய மரம் வருந்தக் கொடுவந்து யாம் கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமது பரிசில்; விரைந்த செலவினையுடைய குதிரையையுடைய தலைவனே! இனி யான் போவல் - எ-று.

யான் போவலென்ற கருத்து: முன் சிறிதுகொடுப்பக் கொள்ளாத மிகுதி தோன்ற நின்றது.

இரவலருண்மையுங்காணினியென்ற கருத்து: இரப்போர்க்குப் பெருந்தன்மையுளதாதல் என்னளவிலே காணென்பதாம்.

163. நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்

நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
5 இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

திணை - அது (=பாடாண்); துறை - பரிசில்.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

(இ-ள்.) நின்னைக் காதலித்து உறையும் நின்சார்வாய மகளிர்க்கும் நீ அன்பு செய்தொழுகப்பட்ட மகளிர்க்கும் பல குணங் களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்த மகளிர்க்கும் நமது சுற்றத்தினது மிக்க பசி நீங்க நினக்கு நெடு நாட்படக் குறித்த எதிர்ப்பைத் தந்தோர்க்கும் மற்றும் இன்ன தன்மையாரென்று கருதாது என்னொடு கூடி உசாவுவதும் செய் யாது சதுரப்படக் குடி வாழ்க்கை வாழக் கடவேமென்று கருதாது நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக, எனது மனைக்குரியோயே! பலாப்பழ முதலாயின தூங்கும் முதிரமென்னும் மலைக்குத் தலை வனாகிய திருந்திய வேலையுடைய குமணன் நல்கிய செல்வத்தை- எ-று.

மனைகிழவோய்! குமணன் நல்கிய செல்வத்தை நீயும் எல்லோர் க்கும் கொடுமதியெனக் கூட்டுக.

நின் பன்மாண்கற்பிற் கிளை முதலோர்க்குமென இயையும்; நின்றாங் குரைப்பினும் அமையும்.

நீயுமென்ற உம்மை யானுங்கொடுப்பேன் நீயுங் கொடுவென எச்ச வும்மையாய் நின்றது.

182. உண்டா லம்மவில் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்

துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
5 புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு.

(இ-ள்.) உண்டேகாண் இவ்வுலகம்; இந்திரர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தானாதல் தவத்தானாதல் தமக்கு வந்துகூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலுமிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகுந் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தற் பொருட்டு மடிந்திருத்தலுமிலர் (மடிந்திருத்தல் - சோம்பியிருத்தல்); புகழ் கிடைக்கின் தம்முடைய உயிரையுங் கொடுப்பர்; பழியெனின் அதனான் உலக முழுதும் பெறினும் கொள்ளார்; மனக் கவற்சி யில்லார்; அப்பெற்றித்தாகிய மாட்சிமைப் பட்ட அத்தன்மையராகித் தமக்கென்று முயலாத வலிய முயற்சி யையுடைய பிறர் பொருட்டென முயல்வார் உண்டாதலான் - எ-று.

அஞ்சித் துஞ்சலுமிலரென மாறிக் கூட்டுக.

இவ்வுலகம், பிறர்க்கென முயலுநருண்மையான் உண்டெனக் கூட்டுக.

ஆலும் அம்மவும் அசை.

190. விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
5 டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென

அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்.
10 புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

திணையும் துறையும் அவை (= பொதுவியல்; பொருண் மொழிக்காஞ்சி).

சோழன் நல்லுருத்திரன் (பி-ம். சோழனல்லுத்திரன்) பாட்டு.

(இ-ள்.) விளைந்த செவ்வியையுடைய சீறிய இடத்தைப் பார்த்து வளைந்த கதிராகிய உணவைக் கொண்டு முழையின் கண்ணே நிறைய வைக்கும் எலி முயன்றாற்போலும் சிறிய முயற்சி யராகி உள்ள தம்முடைய செல்வத்தை நுகராது இறுகப் பிடிக்கும் உள்ள மிகுதியில்லாருடன் பொருந்திய நட்பு இல்லையாக; தறுகண் மையையுடைய கேழலாகிய பன்றி தனது இடப்பக்கத்தே பட வீழ்ந்ததாக, அன்று அவ்விடத்து உண்ணாதாகிப் பிற்றைநாட் மலையின்கண் தனது முழையிடம் தனிமைப்பட உணவை விரும்பி யெழுந்து பெரிய களிறாகிய ஒருத்தலை நல்ல வலப்பக்கத்தே படப் படுக்கும் புலிபசித்தாற்போலும் குறையில்லாத மேற்கோளையுடைய வலியையுடையோர் நட்போடு பொருந்திய நாட்கள் உளவாக-எ-று.

சீறிடமென்றது,விளைந்து முற்றியபின் அறுப்பதற்கு முன்னாகிய இடத்தை.

இல்லாகியர், உளவாகியரென்பன ஈண்டு வியங்கோட் பொருள வாய் நின்றன.

191. யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென்னிளையரும் வேந்தனும்
5 அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

திணையும் துறையும் அவை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது.

(இ-ள்.) நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படியாயினீரெனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினார்; யான் கருதிய அதனையே கருதுவர், என்னுடைய ஏவல் செய்வாரும்; * அரசனும் முறையல்லாதன செய்யானாய்க் காக்கும்; அதற்குமேலே யான் இருக்கின்ற ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பலராதலான் - எ-று.

'ஆன்றவிந்தடங்கிய' என்பதற்குக் கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவவிந்து மனமொழி மெய்களான் அடங்கியவெனினும் அமையும்.

'யாங்காகியர்' என்பதற்கு எவ்வாறாயிற்றென்றும், எப்படியாலாயிற்றென்றும் பொருள் கூறுவாரும் உளர்.

192. யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
5 இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்

---

* "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள், 388).

10 முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

திணையும் துறையும் அவை.

கணியன் பூங்குன்றன் பாட்டு.

(இ-ள்.) எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; கேடும் ஆக்கமும் தாமே வரினல்லது, பிறர் தர வாரா; நோதலும் அது தீர்தலும் அவற்றையொப்பத் தாமே வருவன; சாதலும் புதி தன்று; கருவிற்றோன்றிய நாளே தொடங்கியுள்ளது; வாழ்தலை இனிதென்று உவந்ததுமிலம்; ஒரு வெறுப்பு வந்தவிடத்து இன்னாதென்றிருத்தலுமிலம்; மின்னுடனே மழை குளிர்ந்த துளி யைப் பெய்தலான் அமையாது கல்லை யலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின்வழியே போம் மிதவை (மிதவை-தெப்பம்) போல அரியவுயிர் ஊழின்வழியே படுமென்பது நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தே மாகலான், நன்மை யான் மிக்கவரை மதித்தலுமிலேம்; சிறியோரைப் பழித்தல் அம் மதித்தலினுமிலேம் - எ-று.

தலைஇயென்பதனைத் தலையவெனத் திரிக்க.

'முனிவி னின்னா தென்றலு மிலமே' என்றதற்கு முன்னே கூறிய வாழ்தலை வெறுப்பான் இன்னாதென்று இகழ்ந்திருத்தலு மில்லேமெனினும் அமையும்.

235. சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன்மன்னே
5 பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன்மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு
மன்னே

அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு
மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
10 அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத்
துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவைசோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
15 அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநருமில்லைப் பாடுநர்க்கொன் றீ
குநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
20 றீயாது வீயு முயிர்தவப் பலவே.

திணையும் துறையும் அவை(=பொதுவியல், கையறுநிலை).

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

(இ-ள்.) சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் எங்களுக்குத் தருவன்; அது கழிந்தது! பெரிய அளவினையுடைய மதுவைப் பெற்றானாயின் அதனை யாமுண்டு பாட எஞ்சிய மதுவைத் தான் விரும்பி நுகர்வான்; அது கழிந்தது! சோறு எல்லார்க்கும் பொதுவாதலாற் சிற்றளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப் பல கலத்தோடுங்கூட உண்பன்; அது கழிந்தது! மிக்க அளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப் பல கலத்தோடுங் கூட உண்பன்; அது கழிந்தது! என்போடு கூடிய ஊன்றடியுளதாகிய இடமுழுவதும் எங்களுக்கு அளிப்பன்; அது கழிந்தது! அம்போடு வேல் தைத்து உருவும் இடமாகியபோர்க்களமுழுவதும் தான் சென்று நிற்பன்; அது கழிந்ததே; தான்

காதலிப்பார்க்கு மாலை சூட்டுதலான் நரந்தப்பூ நாறும் தன்னுடைய கையால் தான் அருளுடைமையிற் புலால்நாறும் எம்முடைய தலையைத் தடவுவான்; அது கழிந்ததே! அரிய தலை மையையுடைய பெரிய பாணரது அகலிய மண்டையின்கண் துளை யையுருவி இரப்பவர் கையுளும் தைத்துருவித் தன்னாற் புரக்கப் படும் சுற்றத்தாரது புல்லிய கண்ணிற்பாவை ஒளிமழுங்க அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினை யுடையோர் நாவின் கண்ணே போய் வீழ்ந்தது, அவனது அரிய மார்பகத்தின் கண் தைத்த வேல்; எமக்குப் பற்றாகிய எம்மிறை வன் எவ்விடத்துள்ளான் கொல்லோ? இனிப் பாடுவாரும் இல்லை பாடுவார்க்கு ஒன்றீவாரும் இல்லை! குளிர்ச்சியையுடைய நீரை யுடைய துறையின்கட் பகன்றையினது தேனைப் பொருந்திய பெரிய மலர் பிறராற் சூடப்படாது கழிந்தாற் போலப் பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்காது மாய்ந்துபோம் உயிர் மிகப்பல -எ-று.

அவன் நிறத்து உருவிய வேல் அவனுக்கு இறந்துபாட்டைச் செய்தலோடே பாணர் முதலாயினார்க்கும் இறந்துபாட்டினைச் செய்தலான் ஒரு காலத்தே யாவரிடத்தும் தைத்ததென்றாராகக் கொள்க

மன் கழிவின் கண் வந்தது.

Abbreviations used in the Commentaries

இ-ள். — இதன் பொருள் (its meaning)

எ-து. — என்பது (it is said)


எ-று. — என்றவாறு (the way it is said)

ப-ரை. — பதவுரை (word-by-word explanation)

பி-ம். — பிரதி பேதம் (variant reading)


Errata

Page No.	Line No.		To read as
2	19	ataṉiu	ataṉiṉ
5	18	ceasse	cease
	21	foiled	boiled
6	4	an. n.	ap. n.
8	6	aku-	āku-
9	17	2, 70	2; 70
11	11	place space	place, space
13	3	illar	ilar
14	2	iṟā-	iṟa-
15	18	sīhala,	sīhala),
16	17	cf	f.
19	3	uvaṅam	uvaṇam
	18	n	n.
24	23	éval	ēval
30	7	kavar	kavar-
40	27	of	cf.
58	11	nekīḷiṉ	nekiḷiṉ
60	15	(Cinivøcaṉ)	(Cīnivācaṉ),
63	6	acquinted	acquainted
76	12	watters	waters
80	1	pron. I Kuru.	pron. I, Kuṟu.
94	8	vāṭāṇ	paṭāṇ
95	9	ov	or
		+āṉ	+āṇ
96	1	lIterature	literature
	34	16 July	15 July
105	14	pākaṭu	pakaṭu
	15	pāṉṟi	paṉṟi



(Madras)
PUNNĀṬU
Takaṭūr
Mutiram
Naṟavu
(Salem)
(Nīlagiri
Hills)
Vāṇi R.
Kollimalai
(Chidambaram)
Tiruccenkōṭu
Konku
Nāṭu
Turaiyūr
Pukār
(Coimbatore)
KONKĀṆAM
Kāviri R.
Toṇṭi
CĒRA
Porai
Nāṭu
Āṉ
Uṟaiyūr
(Tiruccirāp-
paḷḷi)
(Tanjore)
Koṭumaṇam
Pūḻināṭu
Potiṉi
CŌḺAR
Vañci
Muciṟi
(Palani Hills)
Koṭai
(Point
Calimere)
Periyāṟu
Kūṭal (Maturai)
Aḷḷūr
PĀṆṬIYAR
Vaiyai
KUṬṬANĀṬU
Potiyamalai
(Potiyil)
Tāmraparṇi
Korkai
Nāñcil
(Tiru-
nelvēli)
Centil (Tiruccentūr)
ĪḺAM
(Trivandrum)
ĀY
(Nagercoil)
(Cape Comorin)
Key :
Capitals, Towns
(Modern Towns)
Mountains

GRAMMATICAL CHART : BASIC LEXICAL CLASSES AND THEIR GRAMMATICAL FUNCTIONS



உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1.	தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு	70.00
2.	தமிழகத்தில் ஆசீவகர்கள்	18.00
3.	சமயச் சொல்லகராதி	35.00
4.	தொல்காப்பியம் - உயிரியல்	20.00
5.	மங்கலதேவி கண்ணகி கோட்டம்	15.00
6.	தமிழில் கதைப்பாடல்	25.00
7.	வாத்திய மரபு	20.00
8.	குத்புநாயகம் ஆய்வுரை	15.00
9.	உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு	15.00
10.	தமிழ் தந்த வ. உ. சி.	15.00
11.	தொல்காப்பியம்-இடையியல்	22 00
12.	மறைமலையடிகளார் தனித்தமிழ்க்கொள்கை	15.00
13.	உலக முதன்மொழி தமிழ்	12.00
14.	மகாமதிப்பாவலர்	11.00
15.	டாக்டர் உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள்	12.00
16.	தமிழர் கூத்துகள்	25.00
17.	செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்	15.00
18.	மருந்து செய்முறைகள்	45.00
19.	அகலமும் ஆழமும்	12.00
20.	தமிழ் நாவல்கள் (அகர வரிசை)	40.00
21.	தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	35.00
22.	1982-இல் தமிழ்	90.00
23.	மொழிபெயர்ப்பியல்	10.00
24.	நெல்லை மாவட்ட நாட்டுபுரத் தெய்வங்கள்	15.00
25.	செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்	25.00
26.	விவிலியம்-திருக்குறள்-சைவசித்தாந்தம்-ஓர் ஒப்பாய்வு	20.00
27.	டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள்	10,00
28.	தேவநேயப்பாவாணரின்சொல்லாய்வு	10.00
29.	பாவாணரும் தனித்தமிழும்	12.00
30.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-2	22.00
31.	தமிழர் இசை	70.00
32.	இளங்கோவின் இலக்கிய உத்திகள்	12.00
33.	வர்மசூத்திரம்	10.00
34.	தொல்காப்பியம்-வினையியல்	20.00
35.	தன்வந்திரி குழந்தை வாகடம்	14.00
36.	தொல்காப்பியம்-பெயரியல்	12.00
37.	தமிழரின் தாயகம்	10.00
38.	தொல்காப்பியம்-விளிமரபு	6.00
39.	தொல்காப்பியம்-வேற்றுமைமயங்கியல்	12.00
40.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-1	12.00
41.	உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	10.00
42.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	15.00
43.	திராவிடமொழி இலக்கியங்கள்	35.00
44.	Thirukkural-The Daylight of the Psyche	25.00
45.	Tamil Verse in Translation	40.00
46.	Education & Vocation (Heritage of the Tamils)	50.00
47.	Heritage of the Tamils - Temple Arts	50.00
48.	Karaikkal Ammaiyar	6.00
49.	Siddha Medical Manuscripts in Tamil	8.00
50.	Siddhha Medicine - Heritage of the Tamils	45.00
51.	Tamil Text - An Auto Instructional Course	25.00